ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2248/63 - 2021 ඔක්තෝබර් මස 08 වැනි සිකුරාදා - 2021.10.08
2248/63 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக மறு வகைப்படுத்தல்

2021.04.05 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக மேம்படுத்தி மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவ கற்கை பயிற்சி வசதிகளை வழங்குவதற்குத் தேவையான பேராசிரியர் அலகுகளை நிறுவுவதற்கு இந்த வைத்தியசாலை அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலதிக மருத்துவ பயிற்சிக்காக ஹொரண மற்றும் பாணந்துறை ஆதார வைத்தியசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் புதிதாக நிறுவப்பட்ட மருத்துவ பீடத்தின் மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக மேம்படுத்தி மறு வகைப்படுத்தப்பட்டுள்ளது. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு இணைக்கப்பட்ட மருத்துவ மாணவர்களின் மருத்துவ பயிற்சிகளுக்கான வசதிகளை வழங்கும் பொருட்டு இந்த மூன்று வைத்தியசாலைகளும் மேலும் மேம்படுத்தப்படும்.

**வைத்தியர் எஸ். எச். முனசிங்க,**
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

இல. 385, ''சுவசிரிபாய'',
சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

10 - 315